* 482 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism with reference to question No. 51 answered on 7th August 1973, be pleased to state—

(*a*) whether the Industrial Liaison Board has formulated sandwich or co-operated courses in collaboration with Industries in Coimbatore district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிச்சாமி: கோயம்புத்தூரில் பலவிதமான தொழில்கள் ஏராளமாக இருப்பதன் காரணமாக, அவர்களுக்குத் தேவையான டெக்னிகல் நோ-ஹௌ அளிக்கப்படவேண்டியது அவசியம். ஆகவே, இத்தகைய பயிற்சியை அளிப்பதற்கான நடவடிக்கை அரசு எடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. கூடுமான வரையில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஏதேனும் ஒரு பயிற்சி அளிக்க 'சாண்ட்விச்' கோர்ஸ் இருக்குமானல் நல்லது என்ற முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, எந்தெந்த தொழிற்சாலையினர் ஒத்துவருகிறார்களோ அந்தத் தொழிற்சாலைக்கு குறிப்பிட்ட மாணவர்கள் அனுப்பப்படுகிற திட்டம் இருந்துவருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: இதற்கு ஏதாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானல் எந்த அடிப்படையில் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றி குறிப்பு இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.